பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 53

சனிக்கிழமை
18 ஜனவரி 2025

தை 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

துப்பாக்கிச் சூடுகளை தடுத்து நிறுத்துங்கள்!
» 03

சிறுபான்மையினருக்கு எதிரான

# வன்முறைகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர மௌனம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

**கொழும்பு, ஜனவரி 18**

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சிறுபான்மை மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக மௌனம் காக்கின்றார் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.**
11

## ஏப்ரல் 10ஆம் திகதியன்று உள்ளூராட்சித் தேர்தல்?

கொழும்பு, ஜன. 18
உள்ளூராட்சித் தேர்தலை ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாளொன்றில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
அனேகமாக ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்காக புதிய சட்ட மூலம் நாடாளு
11

## மின்சாரக் கட்டணம் 20 வீதம் குறைப்பு!

கொழும்பு, ஜன. 18
மின்சாரக் கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைப்பதற்கு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.
எதிர்வரும் 6 மாத காலத்தை வரையறுத்து 20 வீத மின்கட்டண குறைப்பை நேற்று நள்ளிரவு முதல்
11

## வல்வெட்டித்துறையில் நேற்றுச் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18
யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறைப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர், பொலிஸார், இராணுவத்தினர் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் குவிக்கப்பட்டு நேற்று இரவிரவாகத் தேடுதல்களும் சுற்றிவளைப்பும் முன்னெடுக்கப்
11

கிளிநொச்சி

## திருவள்ளுவர் மாதிரிக்கிராமம் பொதுமக்களின் பாவனைக்கு!

விரிவு :- பக். 11



## மின்கட்டணக் குறைப்பு ஏமாற்று நடவடிக்கையே

கொழும்பு, ஜன. 18
மின்சாரக் கட்டணம் 33 வீதத்தால் குறைக்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்திருந்தாலும் 20 சதவீதமே குறைக்கப்பட்டுள்ளது. இது ஏமாற்று நடவடிக்கையாகும் என்று மின்சார பாவனையாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.
மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
தேர்தல் பரப்புரைகளின் போது மின்சாரக் கட்டணம் 33 வீதத்தால்
11

## நீதிமன்றத் துப்பாக்கிச்சூடு: சூத்திரதாரி வெளிநாட்டில்!

மன்னார், ஜன. 18
மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு வெளிநாட்டில் இருந்தே வழிநடத்தப்பட்டுள்ளது. குறித்த சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெ
11

## ஈழத்தமிழ் நாடக உலகின் பிதாமகன் குழந்தை ம.சண்முகலிங்கம் மறைவு



கொழும்பு, ஜன. 18
நாடக அரங்கக் கல்லூரியின் ஸ்தாபகரும், ஈழத்து தமிழ் நாடக உலகின் பிதாமகனுமான குழந்தை ம.சண்முகலிங்கம் (வயது 93) நேற்று யாழில் காலமானார்.
ஈழத்தமிழ் நாடக உலகில் தவிர்க்க முடியாத
11

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துக!

## ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக்குழு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18
வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை உறுதிப்படுத்தும் பொறிமுறைகளையும், சீர்திருத்தங்களையும் ஜனாதிபதி அநுரவும், புதிய அரசாங்கமும் செயற்படுத்த
11

## கோத்தாவிடம் துருவியது சி.ஐ.டி.

கொழும்பு, ஜன. 18
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்
11




'திசைகாட்டி வந்த பிறகு உருப்படியா நடந்த ஒரு நல்லவிசயம் இதுதான் பாருங்கோ'

## தமிழரசின் மத்திய குழு திருமலையில் கூடுகிறது

திருகோணமலை, ஜன. 18
இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் இன்று கூடவுள்ளது.
11

## தெல்லிப்பழையில் இன்று தேசியப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 18
தெல்லிப்பழையில் இன்று தேசியப் பொங்கல் விழாக்கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இன்று காலை 7.30 மணிமுதல் சமய வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.
11

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
15 EDITION
JITF 2025
15th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
இன்னும் 6 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணிப் பேச்சுக்கு ஐ.ம.சக்தி சமிக்ஞை

கொழும்பு, ஜன.18
ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைந்து பயணிக்கவேண்டும் எனக் கட்சி ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
அதற்கமைய பொது இடமொன்றில் வெகுவிரைவில் பேச்சுகள் ஆரம்பமாகும் என அறியவருகின்றது. (ச-44)

# மன்னாரில் துப்பாக்கிச்சூடு; பொலிஸாரே முழுப்பொறுப்பு!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

**மன்னார், ஜன.18**
**மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு மன்னார்ப் பொலிஸாரே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மன்னார் நீதிமன்றத்தின் முன்பாக நடந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் உண்மையில் ஒரு காட்டுமிராண்டித் தனமான சம்பவமாகும்.
நொச்சிக்குளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகின்றனர். இந்த விடயத்தைக் கடந்த அரசாங்கத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் நேரடியாகக் கலந்துரையாடியிருந்தேன். மன்னார் பொலிஸாரின் மெத்தனப்போக்கும் இந்த விடயத்தில் உள்ளது. இந்தவிடயத்தை ஜனாதிபதியினதும், நாடாளுமன்றத்தினதும் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளேன்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டும். மன்னார் பொலிஸாரை மட்டும் வைத்து இதற்குரிய நடவடிக்கைகளைச் செய்வது இயலாதகாரியம். கொழும்பில் இருந்து விசேட பொலிஸ் குழு வரவழைக்கப்படவேண்டும் - என்றார். (எ-இ)



# ஒரு கூட்டணியாக களமிறங்குவோம்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 18
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கிடையிலான இணைவு பெரும்பாலும் ஒரு கூட்டணியாகவே அமையக்கூடும். இதனால் தலைமைத்துவப் பிரச்சினை வராது என சஜித் அணியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் ஒன்றிணைவென்பது உள்ளூராட்சிசபைத் தேர்தலை மட்டும் இலக்காகக் கொண்டதல்ல.
இரு கட்சிகளும் இணைந்து பயணிப்பதற்கான பலமானதொரு பாதையை ஏற்படுத்துவதற்கு தற்போது முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. முதலில் அரசியல் இணக்கப்பாடு எட்டப்படவேண்டும். தனித்துவங்களைக் காத்துக்கொண்டு கூட்டணியாக ஒன்றிணைந்தால் சின்னம் மற்றும் தலைமைத்துவம் உள்ளிட்ட பிரச்சினைகள் எழாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-22,44)

# இரா. சம்பந்தனுக்கு அனுதாபப் பிரேரணை

கொழும்பு, ஜன.18
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மறைந்த இரா.சம்பந்தனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணைமீது நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.
நாடாளுமன்றம் எதிர்வரும் 21 முதல் 24 ஆம் திகதிவரை கூடவுள்ளது. 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மறைந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக முழு நாளும் ஒதுக்கப்படவுள்ளது.
மறைந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், ருக்மன் சேனாநாயக்க, ரொஜினோல்ட் பெரேரா, சிறினால் த மெல் மற்றும் மொஹமட் இல்யாஸ் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக அன்று மு.ப. 9.30 முதல் பி.ப. 5.30 வரை நேரம் ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். (எ-44)

# அநுர அரசாங்கமும் விரைவில் 'க்ளீன்'

கொழும்பு, ஜன.18
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் விரைவில் 'க்ளீன்' செய்யவேண்டிவரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடாளுமன்றத்தில் இருந்து கூட்டுறவுச்சபைவரை எல்லாம் தற்போது 'க்ளீன்' செய்யப்பட்டுவருகின்றன. கூட்டுறவுத் தேர்தல்களில் ஆளுங்கட்சி தோல்வி அடைந்து வருகின்றது. ஏனெனில் குறுகிய காலப்பகுதிக்குள் இந்த அரசாங்கத்தைப் பற்றி மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்- என்றார். (ச-44)

# சவூதித் தூதுவருடன் பிரதமர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
சவூதி அரேபியத் தூதுவர் மற்றும் ஐரோப்பிய சங்கத்தின் தேர்தல் கண்காணிப்புச் செயற்பாட்டின் பிரதான கண்காணிப்பாளர் ஆகியோர் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
இந்தச் சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
இதன்போது அரசாங்கத்தின் அடிப்படை இலக்கு, முதல் இரு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், நாட்டின் வர்த்தகம், சுற்றுலா, நிர்வாகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-26)



**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | 0427 | S | 9 0 6 9 3 1 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | 2693 | T | 02 40 54 72 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | D | 15 37 68 72 | 4854 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | 0602 | 07 10 47 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | | 04 08 32 56 | 4405 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | Z | 12 | 22 31 42 53 | 1869 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 17.01.2025 | வெள்ளிக்கிழமை | E | 12 29 67 73 | 2519 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூடுகளை தடுத்துநிறுத்துங்கள்!

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஜனாதிபதியிடம் கோரிக்கை*



**கொழும்பு, ஜன.18**
**நாட்டில் இடம்பெற்றுவரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் கோரிக்கை விடுக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இந்த ஆண்டில் கடந்த 16 நாள்களில் 5 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் உயிரழந்துள்ளதுடன், நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இந்தநிலைமை நாட்டில் சிவில் பிரஜைகள் தமது அன்றாட நடவடிக்கைகளைச் சுதந்திரமாக மேற்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டுவது அரசாங்கத்தின் முதன்மைப் பணியாகும். பாதாள உலக செயற்பாடுகளை உடனடியாக ஒழிப்பதற்கும், வெளிநாடுகளில் இருந்து கொண்டு இவற்றை வழிநடத்தும் நபர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் எதிர்க்கட்சிக்கு தலைமை வகிக்கும் நபர் என்ற வகையில் நானும், எனது எதிர்க்கட்சி நாடாளுமன்றக் குழுவும் இதற்குத் தேவையான ஆதரவை வழங்க தயாராக இருக்குகிறோம்என்றார். (எ-இ)

## உதயங்கவுக்கு பிணை

கொழும்பு, ஜன.18
கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்க நேற்று பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். அண்மையில், அயல் வீட்டு உரிமையாளரைத் தாக்கியமை தொடர்பில் வீரதுங்கவுக்கு எதிராக கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நாமலிடம் விசாரணை சி.ஐ.டி.க்குஅனுமதி

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிரான வழக்கொன்றின் ஆவணங்களைப் பரிசோதிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 4.3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு வழங்குவதில் 70 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்சவுக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதிமன்றத் தில் வழக்கு தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

*ஆசிரியர்களின் ஆடையால்*

## வினாத்தாள் மதிப்பீட்டு பரீட்சை மையம் மூடல்!

கொழும்பு, ஜன.18
க.பொ.த உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டு மையத்துக்கு ஆசிரியர்கள் சிலர் அணிந்து வந்த ஆடை தொடர்பில் குழப்பநிலை ஏற்பட்டதையடுத்து பரீட்சை மையத்தை தற்காலிகமாக மூடுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று கொழும்பின் புறநகர் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் நடந்துள்ளது.
பாடசாலை நாளான நேற்று பரீட்சை மையத்துக்கு ஆசிரியர்கள் சிலர் புடைவை அணிந்து வராது கவுன் அணிந்து வந்துள்ளனர். அதனால் பாடசாலை அதிபர் அவர்களை பாடசாலைக்குள் நுழைவதற்கான அனுமதியை மறுத்துள்ளார். மதிப்பீட்டு மையம் பரீட்சை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால், இதில் அதிபருக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய வந்த ஆசிரியர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.
எனினும், பாடசாலைக்கென ஒழுக்கம் இருப்பதாகவும், பாடசாலைக்கு வரும் அனைவரும் அதைப் பின்பற்ற வேண்டும் எனவும் அதிபர் குறிப்பிட்டுள்ளார்.
அதனையடுத்து இரு குழுக்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்ட நிலையில் இரு தரப்பினரும் ஒரு உடன்பாட்டை எட்ட முடியாததால், பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை மையத்தை தற்காலிகமாக மூடுமாறு அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# சட்டவிரோத குடியேறிகள் தடுப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜன.18
சட்டவிரோத குடியேறிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிக்கையில்,
அண்மையில் 100க்கும் மேற்பட்ட ரொஹிங்ய புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்குள் பிரவேசித்திருந்தனர். எதிர்வரும் நாள்களில் ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேறிகளை நாட்டுக்கு கடத்தும் திட்டம் இருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
நாட்டுக்கு சட்டவிரோத குடியேறிகளின் வருகை பல்வேறு சிக்கல்களையும் தேவையற்ற சமூக பிரச்சினைகளையும் ஏற்படும்.
அந்தவகையில் சட்டவிரோதமாக குடியேறிகளை தடுக்க கடற்படை விழிப்புடன் உள்ளனர் - என்றார். (ச-இ)




**ஒய்யாரக் கொண்டையாம் உள்ளுக்க ஈரும் பேனுமாம் எண்ட கதையாத்தான் இப்பத்தை திசைகாட்டி அரசாங்கத்தின்ர நிலைப்பாடும் இருக்குது. என்னதான் மூண்டில் ரண்டு பெரும்பான்மைக்கு மேல சீற் எடுத்த அரசாங்கம் எண்டு மார்தட்டினாலும், உள்ளுக்க இப்பவே போட்டியும் புகைச்சலும் கடுமையாத் தொடங்கிட்டுதாம். அதுவும் சாதிச்சண்டையள் மாதிரி ஆர் உண்மையான தேசிய மக்கள் சக்தி எண்டதுதான் பிரச்சினையாம். தேசிய மக்கள் சக்தி எண்டபேரில இந்தப் புதுக்கூட்டணியை ஜே.வி.பி. தான் தொடங்கினது. ஆனால் வழக்கம் போல தாங்கள் மட்டும் நிண்டால் இப்பிடியே உருப்படாமல் இருக்கவேண்டியதுதான் எண்டிட்டு, தங்கட கொள்கையளோட ஓரளவுக்கு ஒத்துப்போற அமைப்புகள் , ஆக்களையும் சேர்த்துக் கொண்டுதான் தேசிய மக்கள் சக்தி எண்ட பேரில எலக்சன் கேட்டவை. இப்பிடி அவை பழைய கள்ளோட புதுக் கள்ளைச் சேர்த்துக் காட்டின திசைகாட்டிப் போதையில சனங்களும் கிறங்கிப்போய், அமோகமாக வெல்ல வைச்சிட்டினம்.**

**எப்பவும் போராடேக்க ஒண்டா நிக்கிறவை வெண்ட பிறகு 'எங்களாலதான் இந்த வெற்றி வந்தது' எண்டு உரிமை கொண்டாடப்பாப்பினம். அதுக்கு திசைகாட்டியும் தப்பேலை. என்னதான் பிறத்தி ஆக்களையும், அமைப்புகளையும் தங்களோட சேர்த்துக்கொண்டு 'நாங்கள் பழைய ஜே.வி.பி. இல்லை, தேசிய மக்கள் சக்தி' எண்டு படம் காட்டினாலும் உள்ளுக்க கடும் பிடுங்குப்பாடுகளாம். 'நாங்கள் தான் இந்த அமைப்பு உருவாக்கி பாவம் பார்த்து உங்களையும் சேர்த்தம். அதால ஜே.வி.பி. என்ன சொல்லுதோ அதைத்தான் நீங்கள் செய்யோணும். நீங்களா ஒரு முடிவை தனிச்சு எடுக்கக் கூடாது' எண்டெல்லாம் நிபந்தனையள் போடுகினமாம். அதுக்கு திசைகாட்டியில இருக்கிற பிறத்தி ஆக்களும்,அமைப்புகளும் ' நீங்கள் தனி ஜே.வி.பி.யா இருந்தால் பழையபடி ரண்டு, மூண்டு சீற்றோட அப்பிடியே இருந்திருப்பியள். நாங்களும் சேர்ந்ததாலதான் உங்களுக்கும் நல்லபேர் கிடைச்சு இப்பிடி வெண்டனியள். அதால சில விசயங்களில எங்கட போக்கில விடுங்கோ' எண்டு சொல்லிப் பார்த்தும், ஜே.வி.பிக்காரர் கேக்கினமில்லையாம்.**

**போனமுறை பார்லிமெண்ட் நடக்கேக்க, ஒரு விவாதம். அந்த விவாதம் தொடங்க லேற்றாப் போட்டுதெண்டதால எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ' நேரம் பத்தாமல் இருக்கு. அதால லஞ்சுக்கு போற அரைமணித்தியாலத்தையும் விவாதத்துக்கு தர ஏலுமோ?'எண்டு பிரதமர் ஹரிணியிட்ட கேட்டிருக்கிறார். ஹரிணியும் 'ஒரு பிரச்சினையுமில்லை. அப்பிடியே நடத்துவம்' எண்டு பச்சைக்கொடி காட்டிப்போட்டா. அதைப் பார்த்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு வந்திச்சே ஒரு கோபம். ஆள் எல்லாருக்கும் முன்னால 'அதெப்பிடி லஞ்ச் ரைமில விவாதம் வைக்கலாம்? நாங்கள் சாப்பிடப் போறேலையோ? பார்லிமெண்டில வேலை செய்யிறவைக்கு அந்த லஞ்ச் பிரேக் மட்டும் தான் ஓய்வு. அதை எப்பிடி நீங்கள் கெடுப்பியள்?' எண்டு கடும் சத்தம் போட்டவராம். பகிடி என்னெண்டால் விவாதத்துக்கு கேட்ட அரைமணித்தியாலத்தை விடவும் அவர் சண்டை பிடிச்சநேரம் கூடவாம். பேசாமல் விவாதத்துக்கே விட்டிருந்தால் அரைமணித்தியாலத்துக்குப் பிறகாவது பார்லிமெண்டில வேலை செய்யிற ஆக்கள் சாப்பிட்டிருப்பினம். ஆனால் பிமல் தன்ர வித்துவத்தையும், ஈகோவையும் பிரதமரோட காட்டி முக்கால் மணித்தியாலத்துக்கு மேல பேசினதால இன்னும் லேற்றாப்போட்டுதாம். இப்பிடியான சீத்துவத்திலதான் இவையின்ர ஆட்சி நடக்குதாம். போகப்போக இன்னும் புகைச்சல் கூடி கடைசியா எல்லாமே பத்தியெரிய வேண்டித்தான் வரப்போகுது போல.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு எதிர் பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவு களாகவே இருக்கும். சிலருக்கு விருந்து விசேடங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**கன்னி:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**துலாம்:** எதிலும் நிதானமாக செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம் :** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவி னர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**தனுசு:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறை வேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**மகரம்:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக் கூடும்.

**மீனம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும் பத்தில் உங்கள் யோச னைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும்.





# வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.18

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண தைப் பொங்கல் விழா நேற்று மாதகல் நுனசை முருகன் ஆலய வளாகத்தில் அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது . முதன்மை நிகழ்வாக ஆலய வளாக வயலில் இருந்து சடங்காசார முறைப்படி புதிரெடுத்து அதனை ஆலயத்துக்கு எடுத்துச்சென்று பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து ஆலய முன்றலில் எடுத்துவந்த நெல்லை உரலில் இடித்து அரிசியாக்கி 51 பொங்கல் பானைகளில் இடப் பட்டு பொங்கல் பொங்கப்பட்டது.

தொடர்ந்து கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன. (ச-125)

## இசை ஆராதனை

யாழ்ப்பாணம், ஜன.18

கிழவன்காடு கலாமன்றத்தின் காரைநகர்- யாழ். கிளை நடத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 178 ஆவது இசை ஆராதனை நிகழ்வு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

## தேசிய பொங்கல் விழா இன்று தெல்லிப்பழையில்

யாழ்ப்பாணம், ஜன.18

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் இன்று தேசிய பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நிகழ்வுக்கு புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமை தாங்கவுள்ளார். நிகழ்வில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருத்து கலை, கலாசார, பண்பாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் விசேட குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளது. (ச-20-27)

## விலைமனுக்கோரல் முடிவுத்திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.18

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையால் உதயன் பத்திரிகையில் கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பக்கம் 9 இல் விளம்பரப்படுத்தப்பட்ட தீந்தை (paint) மற்றும் தீந்தை (paint) அடித்தலுக்கான கூலி என்பவற்றுக்கான

விலைமனுக்கோரலின் இறுதித் திகதி 31.01.2025 ஆக நீடிக்கப்பட்டுள்ளது என செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை அறிவித்துள்ளது. (ச-இ)

## சைவபரிபாலனசபையால் அறநெறி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன.17

சைவபரிபாலனசபையினால் 'மேன்மை கொள்' எனும் நோக்கத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 5மணி வரை அறநெறி வகுப்புகளும், ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் 10 மணி வரை பரதநாட்டிய வகுப்புகளும் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

ஆர்வமுள்ள மாணவர்கள் பங்குகொண்டு பயன்பெறலாம் என்றும் வகுப்புகள் யாவும் இலவசமாக இடம்பெறும் என்றும் சைவபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

# 'பார்' லைசென்ஸ் விவகாரம்; அரசும் துணைபோகின்றதா?

### சுமந்திரன் கேள்விக்கணை

யாழ்ப்பாணம், ஜன.18

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்த காலத்தில் வழங்கப்பட்ட மதுபான நிலைய அனுமதிப்பத்திர விவகாரம் தொடர்பில் அரசாங்கம் இன்றுவரை வெளிப்படுத்தவில்லை. இதன்மூலம் இவர்களும் ஊழலுக்கு போனவர்கள் என்ற தோன்றுகின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

[illegible] ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலே அதிகரித்த மதுபானசாலைகள் தொடர்பில் பல பிரசினை எழுந்துள்ளது. அதிகரித்த மதுபான பாவனையால் பருத்தித்துறை வாள்வெட்டு, கத்திக் குத்து இடம்பெற்றுள்ளது.

இலஞ்சத்தை ஒழிப்போம், பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களையும் இலஞ்சத்துக்கு துணை போனவர்களாகத்தான் பார்க்க முடியும். இல்லையேல் முடிந்தால் பார் லைசன்ஸ் விவகாரத்தை உடன் வெளியிடுங்கள் - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும், உன் உழைப்பால் நீ எண்ணியது உன்னை வந்துசேரும். நீ நீயாக இரு.

– அப்துல்கலாம் –

# தேசியத் தலைகுனிவு!

மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக இருவர் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாட்டு வண்டிச் சவாரியொன்றில் ஏற்பட்ட பகையால், அடுத்த சில நாள்களிலேயே சகோதரர்கள் இருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அந்த இரட்டைப் படுகொலைகளுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே மன்னார் இரட்டைப் படுகொலைகள் அமைந்துள்ளன. தீராத பகை, குரோத மனநிலை, பழிவாங்கும் எண்ணம், மனிதம் இறந்த தருணம் என எத்தனையோ விடயங்கள் இந்த இரட்டைப் படுகொலையின் பின்னணியில் உள்ளன. ஆனால், இவற்றுக்கெல்லாம் அப்பால், பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் வினைத்திறன் அற்ற தன்மை, பாதுகாப்பு வீழ்ச்சி என்பனவே இதற்குப் பிரதான காரணம் என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை.

2022ஆம் ஆண்டு மாட்டுவண்டிச் சவாரி தொடர்பில் இடம்பெற்ற மோதலில், சகோதரர்கள் இருவர் வெட்டிப் படுகொலைசெய்யப்பட்ட பின்னர், அந்த வழக்கில் சந்தேகநபர்களாகக் கைதுசெய்யப்பட்டவர்களுக்கும், உயிரிழப்பைச் சந்தித்த தரப்புக்கும் இடையில் இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் மோதல்களும், கொலை முயற்சிகளும் இடம்பெற்றன. எனவே, பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் எந்நேரமும் விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயமாகத்தான் இது இருந்தது. இதை மன்னார் மட்டுமல்ல ஒட்டுமொத்த வடமாகாண மக்களும் அறிவார்கள். ஆனால், நிலைமையின் பாரதூரமான தன்மையை கனதியை ஆபத்தைப் பொலிஸார் மெத்தனப் போக்குடன் கையாண்டுள்ளனர். அதன் விளைவே இந்தப் பழிதீர்ப்பும் - படுகொலைகளும்.

நீதிமன்றம் எப்போதும் உச்சக்கட்டப் பாதுகாப்புக் கட்டமைப்புக்குள் இருக்கவேண்டிய ஒரு பகுதி. நாட்டில் ஏதேனும் அசம்பாவிதங்கள் சம்பவித்தால், உடனடியாகப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய வெகு சில இடங்களில் நாடாளுமன்றத்துக்கு அடுத்தபடியாக நீதிமன்றங்களும் உள்ளன. அவ்வாறாக உயர் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய எல்லைக்குள் இடம்பெற்ற படுகொலைகள் மன்னார்ப் பொலிஸாருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இலங்கைப் பொலிஸ்துறைக்குமே பெருத்த அவமானமாகும். பொலிஸார் உறுதிப்படுத்த வேண்டியது நீதிமன்றத்தின் பாதுகாப்பை மட்டுமல்ல, அதன் மீதான நம்பிக்கையையும்தான். ஆதலால், மன்னாரில் இடம்பெற்ற சம்பவத்தை நீதி மீதான பெரும் அடியாகவும் பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லை.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் ஆயுதமேந்திய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சில மீற்றர்கள் தொலைவில்தான் இராணுவ முகாமொன்றும் அமைந்திருந்தது. அத்துடன், மன்னாரின் நுழைவாயிலில் சோதனைச் சாவடிகள் உள்ளன. கடற்பகுதியில் கடற்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இவற்றையெல்லாம் தாண்டிய வகையில், எவ்வாறு துப்பாக்கி கொண்டுசெல்லப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்படவேண்டும். இந்த விடயத்தில் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு பொலிஸார் சிறப்புக் குழுக்களை அமைக்கின்றனரோ இல்லையோ, பாதுகாப்புக் குறைபாடு தொடர்பில் பொலிஸாரை விசாரிப்பதற்கு தனிக்குழு அமைக்கப்படவேண்டும். எந்தச் சமரசமும் இல்லாமல் பொலிஸார் பொறுப்புச் சொல்லவேண்டும். இல்லையேல் இந்தச் சூட்டுச்சம்பவம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்திவிடும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# அநாமதேய அழைப்புகள் பொதுமக்கள் அவதானம்!

கொழும்பு, ஜன. 18

**பணம் வழங்குவதாகக் கூறி கையடக்கத் தொலைபேசிகளுக்கு வரும் குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என இலங்கைக் கணினி அவசரகாலப் பதிலளிப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.**

போலித் தொலைபேசி அழைப்புகள் மூலம் பணம் பெறுபவர்கள் பற்றி தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த மோசடி நடவடிக்கைகள், பரிசுகளை வென்றுள்ளதாகவும் பல்வேறு தள்ளுபடிகள், வீட்டிலிருந்து வேலைசெய்யும் வாய்ப்புகள் அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் போன்றவற்றை வழங்குவதாகவும் கூறி தொலைபேசிகளுக்கு குறுஞ்செய்திகள் மூலமாகவோ அல்லது அழைப்புகள் மூலமாகவோ மேற்கொள்ளப்படுகின்றன.

இதுபோன்ற மோசடிச் செய்திகளுக்கு தனிப்பட்ட தகவல்களை வழங்காமல் விழிப்புடன் மக்கள் செயற்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



# நாடாளுமன்றில் பாலியல் துன்புறுத்தல் மூவர் பணிநீக்கம்

கொழும்பு, ஜன.18

இலங்கை நாடாளுமன்றப் பெண் பணியாளருக்கு பாலியல் துன்புறுத்தல் மேற்கொண்டமை தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்ட மூன்று நாடாளுமன்றப் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் பல கட்டங்களாக விசாரணைகள் நடத்தப்பட்டே மூன்று பணியாளர்கள் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். (ச-இ)

# கடனாளிகளுக்கு அரசால் நிவாரணம்

கொழும்பு, ஜன.18

கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அரசாங்கம் நிவாரணத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த நிவாரணம் வங்கித் துறையின் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்து பாதிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களின் வணிக நடவடிக்கைகளைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



குருந்தூர்மலை விவகாரம்

# ரவிகரன் உட்பட மூவரும் அழைக்கப்பட்டால் வருக

யாழ்ப்பாணம், ஜன.18

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான வழக்கில், நீதிமன்றால் அழைப்பு விடுக்கும்வரை மூவரும் முன்னிலையாகத் தேவையில்லை என முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

அதேவேளை இந்த வழக்குடன் தொடர்புடைய முன்னிலையாகாத நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்று பணித்துள்ளது. (ச-214)

நாளை

ஞாயிற்றுக்கிழமை - தை - 06

19.01.2025

சுபநேரம் : 09.35 - 11.05
ராகுகாலம் : 05.05 - 06.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 11 . 1948



மறைவு
14 . 01 . 2025

## விசுவநாதன் விமலாம்பிகை

களுவேட்டி கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கிளானையை வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதன் விமலாம்பிகை கடந்த 14.01.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகரத்தினம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற விசுவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர், செந்தில்நாதன், கமலாம்பிகை, நவரத்தினம் (அச்சா), கணேசலிங்கம் (லிங்கம்) மற்றும் அமிர்தாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விஜியலட்சுமி, விஜியகரன் மற்றும் விஜயகுமாரன், விஜியேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கல்பனா, பிருந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விகாஷ், அஷ்மிகா, அஹானா, வர்சன், வனிஷன், வனோஷன், லஷ்மிதா, விக்னேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிறுக்கிழமை எழுவாவுடை மல்லாகம் அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**விஜியேந்திரன் (விஜி) 074 290 9874**
**விஜயகுமாரன் (ராசன்) 076 430 0421**
**அமிர்தாம்பிகை (சகோதரி) 077 2634 052**

**எழுவாவுடை தெல்லிப்பளை,**
**மல்லாகம்.**

(Cs 57236) N-1

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair
15th EDITION
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
வருகை
JITF 2025
15TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
24 25 26
10.30மு.ப - 8.30பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
(Next to Jaffna Fort) (யாழ் கோட்டைக்கு அருகில்)
PLATINUM SPONSOR DIMO | GOLD SPONSORS | SILVER SPONSORS | OFFICIAL SPONSORS | ORGANIZED BY LECS
Imalka: +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk

# பொங்கல் விழா

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தமிழர் திருநாள் பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் செ. நகுலேஸ்வதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி அலுவலர்களான சு.உதயசீலன், திருமதி செல்வராணி ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-9)

## வேலைவாய்ப்பு

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு வேலையாட்கள் தேவை**

- வயதெல்லை 18-45
- Sales Assistant (உதவியாளர்)
- Computer Billing + Cashier
- Manager (02 Years Experiense)
- Store Keeper
- Part Time (05.00p.m-10.00p.m)

**யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது**

077 419 5209, 077 419 5015

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -13, அராலி வீதி இரண்டாம் குறுக்குத்தெரு, ஆதன இல 30A, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை கணபதியர் முருகேசு 03.04.1940 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுல்தான் மொகிடீன் மொகமட் அபூபக்கர் முகதாவில் 3356ம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு: 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை சின்னையா செல்லத்துரைக்கும் மற்றும் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இளையதம்பி சிவலிங்கம் 26.11.1955 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முருகேசு நாகரட்ணம் காராளசிங்கம் முகதாவில் 3322ம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை ஆறுமுகம் தியாகராஜா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை ஆறுமுகம் தியாகராஜா 29.12.1962 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலி மரிக்கார் மொகமட் சுல்தான் முகதாவில் 4215ம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை மொஹிடீன் பிச்சை ஹம்சா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சின்னையா செல்லத்துரைக்கும் மற்றும் பெண் தெய்வானைப்பிள்ளை 20.04.1965 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிச் மொகமட் அலி மரிக்கார் மொகமட் சுல்தான் முகதாவில் 4773ம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு: 10 1/2 அளவுள்ள ஆதனத்தினை ஜெனதும்பா (மகள்) சின்னத்தம்பி மீரான் மொகிடீன் என்பவருக்கு வழங்கியுள்ளார். குறித்த ஆதனத்தை ஜெனதும்பா (மகள்) சின்னத்தம்பி மீரான் மொகிடீன் 02.09.1971ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை முகதாவில் 10254ம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு 10 1/2அளவுள்ள ஆதனத்தினை மொஹிடீன் பிச்சை ஹம்சா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மொஹிடீன் பிச்சை ஹம்சா 02.12.1973 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலி மரிக்கார் மொகமட் சுல்தான் முகதாவில் 6053ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 1 அளவுள்ள ஆதனத்தினை மீராப்பிள்ளை ஹாஜியார் குசைன் முபராக் என்பவருக்கு வழங்கியுள்ளர்.

குறித்த ஆதனத்தை மீராப்பிள்ளை ஹாஜியார் குசைன் முபராக் 23.06.1979 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் மொகிடீன் மன்சூர் முகதாவில் 1011 ம் இலக்க அறுதி உறுதி மூலம் நிரப்பரப்பு 2 குளி 1 அளவுள்ள ஆதனத்தினை மொகிடீன்பிள்ளை செய்துலாப்தீன் பெண் காமிலாக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை முகமட் உசைன் ரசீம் காதும் பெண் மகூகாவும் 11.08.2017 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 1763 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 2. குளி 1 அளவுள்ள ஆதனத்தினை றசீம்கான் அர்சத்கானுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை நசீம்கான் அர்சத்கான் 21.11. 2020ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம. அ. வினோறாஜ் முகதாவில் 39ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 2 குளி 1அளவுள்ள ஆதனத்தினை றசீம்கான் பெண் மசூனா செய்துல் ஆப்தீன் லுக்மான், செய்துல் ஆப்தீன் ரபீக் செய்துல் ஆப்தீன் கஸ்மிலா என்பவர்களுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை றசீம்கான் பெண் மசூனா, செய்துல் ஆப்தீன் லுக்மான், செய்துல் ஆப்தீன் ரபீக் செய்துல் ஆப்தீன் கஸ்மிலா 21.11.2020ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ. வினோராஜ் முகதாவில் 40ம் இலக்க அறுதி உறுதி மூலம் நெற்பரப்பு குளி 11 அளவுள்ள ஆதனத்தினை முகைதீன் அப்துல்காதர் ரகுபாபேகம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை முகைதீன் அப்துல்காதர் ரகுபாபேகம் 04.01.2021 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ம.அ. வினோறாஜ் முகதாவில் 45ஆம் இலக்க சீதன உறுதி மூலம் நெற்பரப்பு குளி 11அளவுள்ள ஆதனத்தினை முகைதீன் அப்துல் காதர் சுஜீனா பானு என்பவருக்கு வழங்கியுள்ளார்.

## ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு ஜே- 87 உப்புக்குளம்கரை" நெற்பரப்பு இரண்டு குளி ஒன்று (நெற் பர 2 குளி 1) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எ. லாசறஸ் அவர்களால் 06.11.1972ம் திகதி அளந்து விபரித்த 3785 இலக்க படத்தில் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந. கேதீஸ்வரன அவர்களால் 11.09.2020ம் திகதி 4764ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் துண்டு -1 மற்றும் துண்டு -2 எனக்காட்டப்பட்டுள்ளது. இதன் தற்போதைய மொத்த விஸ்தீரணம் நெற்பரப்பு ஒன்று குளி பதினொன்று தசம் ஏழு நான்கு (நெற்பர 1 குளி 11.74). இதில் துண்டு 2 என காட்டப்பட்ட நெற்பரப்பு பூச்சியம் குளி பதினொன்று (நெற்பரப்பு.00குளி11) ஆகும்.

**இதற்கு எல்லைகள்:-**

கிழக்கு: அராலி வீதி. 2ம் குறுக்குத்தெரு.
வடக்கு: வரைபட இலக்கம் 4764ன் படி துண்டு-1
மேற்கு: சவக்காலை.
தெற்கு: முகமது அப்துல்காதர் முகமது மீராலெப்பை அவர்களின் ஆதனம்.
இதடங்கலும் கிழக்கு எல்லையில் காணப்படும் பாதையை பாவிக்கும் உரித்தும்

தற்போது இவ்வாதனத்தை முகைதீன் அப்துல் காதா சுஜீனா பானு மறு பெயர் அப்துல் காதர் சுஜீனா பானு என்பவர் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது முகைதீன் அப்துல் காதர் சுஜீனா பானு மறு பெயர் அப்துல் காதர் சுஜீனா பானு) என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(CR 44127) n-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலமுடன் வருவேன்!

புற்றுநோய் பாதிப்பில் இருந்து குணமடையத் தொடங்கியுள்ளேன். விரைவில் முழுமையாக நலமடைவேன் என்று பிரிட்டன் இளவரசி கேட் மிடில்டன் தெரிவித்துள்ளார். (ம)


### ஆண் வேலையாட்கள் தேவை

K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சிகை அலங்கார கடை ஒன்றிற்கு சிகை அலங்கார வேலைக்கு ஆண் வேலையாட்கள் தேவை

(cs 57231) (N-1)

076 759 3357





ஈழ நிசான் அறக்கட்டளையால் 775 மாணவர்களுக்கு 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### பிரதேசசபை கடைகள் வாடகைக்கு வழங்குதல் தொடர்பான 2வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட மருதனார்மடம் சந்தைப்பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகயினை 14.02.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 20.01.2025 - 05.02.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 06.02.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 06.02.2025 வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாத வாடகை | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு மீளளிக்கக் கூடியது |
|---|---|---|---|---|---|
| மேற்தளம் | | | | | |
| கடை இல - 06 | 308 | 2,040,000.00 | 8,500.00 | 2,000.00 | 41,000.00 |

நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கிராம சேவகரால் உறுதிப்படுத்திய கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனி கடித உறையில் இட்டு "செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை ஒவ்வொரு மாதம் 31ம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதக்கட்டணத்தின் 10 வீதம் தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
5. கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 13.02.2025ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரேதடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேசசபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
6. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேசசபையால் அங்கீகரிக்கப்படாத பொருட்கள் மற்றும் மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்தபொருள்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
7. சித்திகர கேள்விதாரர் வலிகாமம் தெற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
8. சித்திகர கேள்விதாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
9. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சா.உருத்திரசம்பவன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

18.01.2025

(GR/44126) J-1


## விற்பனைக்கு

- பாவித்த நெல்லு பெட்டகம் - 01 தனி
- பாவித்த 3x3 யன்னல் கதவுடன் - 04 தனி
- பாவித்த கிணறு மூடி G.I பைப்பிலானது - 01 தனி
- பாவித்த தள்ளு கேற் 13 அடி நீளமானது - 01 தனி

இடம் : கருவப்புலம் வீதி, கொக்குவில்.

தொடர்பு:- 077 498 0404

(CS/57243) J-1


## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 06 . 1980



இறப்பு 11 . 01 . 2025

### சிவதாஸ் சஞ்சயன்

யாழ்ப்பாணம் வேல்ணையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிவதாஸ் சஞ்சயன் கடந்த 11.01.2025 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சிவதாஸ் மற்றும் காலஞ்சென்ற இந்திராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான மோகனதாஸ் - நாகலோயினி தம்பதியரின் அன்பு மருமகனும், கஜிதாவின் அன்புக் கணவரும், அக்ஷனாவின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி - நாகேஸ்வரி தம்பதிகள் மற்றும் சிவனேசபிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், ஜனார்த்தனி, சாம்பவி, பிரணவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜீரன், புவிகரன், யதுகுலன், சதீஸ், பிரதீஸ், வாகீஸ், திலீபா, சோபியா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 725 0986

(cs.57233) (N-1)

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி லில்லி நீற்ரா இரபாயேல் தி.கு

ஊறனி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி லில்லி நீற்ரா இரபாயேல் தி.கு நேற்று (17.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (18.01.2025) இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி
121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா சோமசுந்தரம்

(நிறுவுநர் - சிவசக்தி ஜுவல்லறி,
ஓய்வுபெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர்)

தன்னலம் மறந்து
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
உயர்வுக்காய் சதாசிந்தித்து
மிக எளிமையாகவும், ஒழுக்கமாகவும்
நமக்கெல்லாம் முன்னுதாரணமாக வாழ்ந்து
இறுதித் தருவாயில் திடீர் சுகவீனமுற்றபோதிலும்,
தன் நோயை விட தனக்கு பின் எம்
எதிர்காலத்தை பற்றி எண்ணிக்கலங்கிய
உங்கள் நினைவுகளையும் கனவுகளையும்
சுமந்து நீங்கள் காட்டிய வழியில்
என்றும் பயணிப்போம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்
நெஞ்சை விட்டு அகலாது

தோற்றம் 07.07.1920

மறைவு 18.01.2015

**சிவசக்தி ஜுவல்லறி**
295, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.
077 170 0145, 077 578 3775

(CS/57039) J-1

# மரண அறிவித்தல்



## தங்கராசா செல்லம்மா

வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா செல்லம்மா (வாதரவத்தை நாச்சிமார் ஆலய பரிபாலகர்) அவர்கள் நேற்று (17.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஞானவேல் மற்றும் ரூபசவுந்தரி, உதயகுமார் (லண்டன்), கணேசராசா, இலங்கேஸ்வரன் (கிளை முகாமையாளர், Fair first காப்புறுதி, யாழ்ப்பாணம்), கிருஸ்ணரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராதேவி, இலட்சணகுமார், ஜெயதிலகராணி (லண்டன்), ரவீந்திரராணி, காயத்திரி, விஜயமாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவாஸ்கரன், ரசீகரன், நிஷாகரன், காலஞ்சென்ற ஜெசிகரன் மற்றும் ஜெயரூபன், விஜயரூபன், ஜெயகாந்தன், ஜெயசாந்தன், கிஷோக்குமார், லண்டனில் வசிப்பவர்களான கிருசாந், உதயகீதா, சசிந்தா, கிரிசங்கர், நிரோஜன், நிதர்சன், கல்பனா, செந்தூரன், சயானுகா, அக்சயன், ஜீவகன், ஜீவிகா, துஷானிகா, சயானுஜன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அன்னராசா, செல்வராசா, சின்னராசா மற்றும் அன்னம்மா, சிவயோகம், சிவகமலா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு:**
**இலங்கேஸ்வரன்:**
**076 466 4629, 077 302 7818**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

பிறப்பு 04 . 09 . 1983

இறப்பு 20 . 12 . 2024



**கடந்த 20.12.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த**
**எமது குடும்பத் தலைவர்**

## அமரர் சிவஞானம் கபிலன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் பாலாவோடை அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு அதேதினத்தில் அவரது இல்லத்திலும் முற்பகல் 11.00 மணியளவில் "காரைநகர் திக்கரை இந்து இளைஞர் மன்றம்" நிகழ இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் எமை பிரிந்த வேளையிலே ஓடோடி வந்த நண்பர்கள், உறவினர்கள் அன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையிலே அவரின் வலி, வேதனைகளை குறைத்து தமது குடும்ப உறுப்பினராக எண்ணி வைத்தியம் செய்த டாக்டர் S.கோபிசங்கர், மேலும் அவரோடு கடமை புரிந்த சகவைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கும், வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் களபூமி இந்து இளைஞர் மன்றம், மற்றும் பொது அமைப்புகள் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மற்றும் அவருடன் பணி புரிந்த சக உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், தொலைபேசியில் இரங்கல் தெரிவித்தவர்கள், இணையதளம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் சாத்தியவர்கள், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் மூலம் தங்கள் இரங்கலை தெரிவித்தவர்கள், இடர்வேளையறிந்து தேநீர் மற்றும் உணவு வழங்கியவர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள், இறுதிக்கிரியைகள் மற்றும் சுபகரண கிரியை நிறைவேற்றிய குருக்கள்கள், பெரியோர்கள் பல வழிகளில் உதவிய நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விளானை, களபூமி,
காரைநகர்.

(CS/57209) J-1

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.போ.ச. - தனியார்

# இணைந்த சேவை வழங்க இணக்கம்

பெப்ரவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்தி லிருந்து இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியாரும் இணைந்து நெடுந்தூர சேவைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயன் தலைமையில் போக்குவரத்துப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையில் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இலங்கை போக்குவரத்துச் சபையும், தனியார் பேருந்து உரிமையாளர்களும் இணைந்து ஒரே இடங்களிலிருந்து சேவைகளை நடத்திவருகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், வடக்கு மாகாணத்திலும் அவ்வாறான நிலைமையை ஏற்படுத்துவதற்காக பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை பலனளிக்கவில்லை எனத் தெரிவித்தார். இனிமேலும் அவ்வாறு ஒருங்கிணைந்த சேவையை நடத்தாமல் இருப்பதற்கு அனுமதிக்க முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், இதற்கு இருதரப்பும் இணங்கவேண்டும் என்று வலியுறுத்தினார். வடக்கு மாகாண மக்களுக்காகவே சேவையாற்றுகின்றீர்கள் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இந்தச் சேவையை வழங்கும் நீங்களும் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களே என்பதை நினைவிலிருத்தி, விட்டுக்கொடுப்புக்களுடன் இணக்கத்துக்கு வருமாறும் கோரினார்.

இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தினால் ஒருங்கிணைந்த சேவைக்கு தயாராக இருப்பதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ள நிலையில், அதற்கு அமைவாக வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் இணைந்த நேர அட்டவணையை வர்த்தமானியில் குறிப்பிட்ட வாறு நடைமுறைப்படுத்துவது என்றும், முதல் கட்டமாக இலங்கை போக்குவரத்துச் சபையும், தனியார் பேருந்து உரிமையாளர்களும் யாழ்ப்பாணம் நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து சேவைகளை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிப்பது எனவும் இணக்கம் காணப்பட்டது. (ம)

நீலமால் மீன்பிடிவலை
மலிவு விற்பனை





நீலமால் 0.50mm (1/2mm) , 0.75mm (3/4mm)
10 size (20mm) அளவுக்கு மேல் மொத்தமாகவும்
சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
Malba Ropes (PTE) Ltd,
No212, Hospital Road Jaffna,
T.P.: 077 770 1695
(cs.57223) (N-1)

# ஜே.வி.பி. அரசாங்கமே பகட்டுகளை நிறுத்துக

## சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

தற்போது ஆட்சியிலுள்ள ஜே.வி.பி. அரசாங்கம் 'க்ளீன் சிறிலங்கா' என்று படம் காட்டுவதை விடுத்து உண்மையாக நாட்டைக் 'க்ளீன்' செய்து குற்றவாளிகளையும், இலஞ்ச ஊழல்வாதிகளையும் தண்டிக்க வேண்டும். அதனைச் செய்யாமல் படம் காட்டும் செயற்பாடுகளில் மாத்திரம் தொடர்ந்தும் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கக்கூடாது எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்காகச் சென்ற இருவர் பொலிஸார் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதுவொரு படுமோசமான நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

மக்களுக்கு நன்மை செய்வதாகவிருந்தால் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளிக் கொள்ளையடித்த ராஜபக்சக்களைக் கைதுசெய்து சிறைகளில் அடைக்கவேண்டும். மத்திய வங்கியைக் கொள்ளையடித்த ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தைச்சிறைகளுக்குள் தள்ளவேண்டும். தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை அறிவதற்காகச் சர்வதேச விசாரணையை நடத்தவேண்டும். அரசியல்கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் - என்றார். (ச-66)

# மரண அறிவித்தல்



அன்னையின் மடியில்
12.03.1973

இறைவன் அடியில்
15.01.2025

## அமரர்
## சண்முகநாதன் திபாஹரன்

**பிரபல வயலின் வித்துவான்**

**(போதனாசிரியர், கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகம், கொழும்பு)**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வயலின் வித்துவான் சண்முகநாதன் திபாஹரன் புதன்கிழமை 15.01.2025 இறைவனடி சேர்ந்தார். அன்னார் வரணி வேலுப்பிள்ளை சண்முகநாதன், சுந்தரராணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சின்னத்துரை நடராசா (இணுவில்) (ஓய்வுநிலை காணி உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு, துணுக்காய்) பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கவிதா (முன்னாள் ஆசிரியை - பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் - மல்லாவி, ஹேமாகம கலகெதர முஸ்லீம் வித்தியாலயம் - பாதுக்க, தற்போதைய ஆசிரியர் - நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், தாமோதரன் (மாணவன் - St.Thomas College - Mt Lavinia) கௌரிசங்கரன் (மாணவன் - St.Thomas College - Mt Lavinia) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹரிஹரன் (கண்ணன்) அங்கவை (அவுஸ்ரேலியா) சங்கவை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அரவிந்தன், சங்கீதா (பிரான்ஸ்), கிரிதரன், சிவதட்சணி, ஜீவராஜ், சிறிசுதன், துஷ்யந்தன், அர்ச்சனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் நாகபூஷணி ஆகியோரின் மருமகனும், கணேசநாதன் (கனடா) காலஞ்சென்ற சிவநாதன் (கனடா) காலஞ்சென்ற கணேஷ்வரி மற்றும் தவமலர், சிவமலர் ஆகியோரின் பெறாமகனும் பிராமி, லதாமி ஆகியோரின் சித்தப்பாவும் ஹரிணி, அனுஷ்கா, அபிநிஷா, கவிநயன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஹர்ஷிணி, சபரிஹரிஷ் மற்றும் சாம்பவி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.01.2025 மற்றும் 17.01.2025 ஆகிய தினங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 18.01.2025 (சனிக்கிழமை) அன்று அவரது இல்லத்திற்கு (மஞ்சத்தடி, இணுவில்) எடுத்து செல்லப்பட்டு 19.01.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : ஹரிஹரன் (சகோதரன்)
077 736 0079

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியத் தூதுவருடன் நேற்று தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 18

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் சந்திரசேகரன், தமிழ் நடாளுமன்ற உறுப்பினர்களான, இளங்குமரன், பவானந்தராஜா, றஜீவன் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தியாவால் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், எதிர்காலத்தில் இந்தியாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் தெரிவித்துள்ளார். (ம-125)

### அரசியற்கைதிகளின் விவகாரம்

## நீதி அமைச்சருடைய கருத்துக்கு கஜேந்திரகுமார் எம்.பி. கண்டனம்

அரசியற்கைதிகள் என்று யாரும் இல்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் தெரிவித்த கருத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒரு சட்டவிரோதமான, கொடூரமான, சட்டத்தின் ஆட்சியை மீறுகின்ற ஓர் ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் கருத்தை தற்போதைய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆதலால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுவதுமாக நீக்க வேண்டும் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைய மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில், இலங்கைச் சிறையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். அவரின் கருத்துக்கூட அரசியல் பின்புலத்துடன்தான் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுர முன்னர் அரசியற்கைதிகள் விடுவிக்கப்படுவார் என்று கூறியிருந்தார். ஆனால், நீதி அமைச்சர் தற்போது தனது முன்னைய கருத்துக்கு மாற்றான நிலைப்பாட்டில் உள்ளார். கொள்கை மாற்றமொன்று இங்கே இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஜே.வி.பி.யினரும் அரசியற்கைதிகளாகவே இருந்தனர். இப்போது அவர்கள் ஆட்சியில் இருந்திருக்காவிட்டால், தமிழ் அரசியற்கைதிகளை, 'அரசியற்கைதிகள்' என்றே அழைத்திருப்பார்கள். எனவே, தற்போதைய அவர்களின் மாற்றத்துக்குக் காரணம் இனவாதம்தான். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம் - என்றார். (ம-26-100)

## கப்பல்கள் திரும்புவதால் நாட்டுக்கு பெரும் நட்டம்

### சமன் ரத்னபிரிய விமர்சனம்

கொழும்பு, ஜன. 18

துறைமுகத்துக்கு வரும் கப்பல்களைப் பரிசோதனை செய்து விடுவிக்க முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்துக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் துறைமுகத்துக்கு வந்த 30 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று சிரித்துக்கொண்டே கூறுகின்றார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் ரத்னபிரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

30 கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதால் நாட்டுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. துறைமுக ஊழியர்கள் 24 மணிநேரம் வேலை செய்து இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் ஒருவாரம் கடந்தும் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கத்தால் தீர்வு காண முடியவில்லை. இந்தப் பிரச்சினை தொடர்வதால் 17 கொள்கலன்கள் துறைமுகத்துக்குள் தேங்கியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன- என்றார். (எ-இ)

## மணிவிழா

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் அதிபர் பசுபதி தர்மபூபதிக்கு மணிவிழா நிகழ்வு இன்று சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு வித்தியாலய ஞானம் அரங்கில் நடத்தப்படவுள்ளது. (ச-40-159)



## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 09 . 1944



மறைவு 14 . 01 . 2025

### தம்பித்துரை சறோஜினிதேவி (தேவி)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை சறோஜினிதேவி (தேவி) கடந்த 14.01.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பித்துரையின் ஆசை மனைவியும், பராசக்தி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, நடராஜா, முத்துப்பிள்ளை, இராசையா, ஞானம்மா, சதாசிவம் ஆகியோரின் மைத்துனியும், விக்கினேஸ்வரன் (ஐங்கரன் ஸ்ரோர்ஸ் - கொட்டக்கலை), விசிஜா (இணுவில்), அசோகன் (கனடா), அப்பன் (இணுவில்), வனஜா (ஜேர்மன்), ஜோதிகா (இணுவில்), குபேந்திரன் (கட்டார்), அஜந்தா (இணுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள்மதி, கிருபாகரன் (ஓய்வுபெற்ற மதுவரி அத்தியட்சகர்), அனுசியா (கனடா), குமுதினி (இணுவில்), ரவீந்திரன் (ஜேர்மன்), மகேந்திரன் (வியாபாரம்), ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், விதுசிகன் (பொறியியல் துறை மாணவன் - கிளிநொச்சி), அபிஜா (மருத்துவ பீட மாணவி), சரவணன் (விமானத்துறை மாணவன்), சிவாகர், பவித்திரன், சாகீத்தியா (கனடா), இலக்கியன். வேணுயானி, சதுர்ஜன், அச்சயன், சிந்துயன் (ஜேர்மன்), ராகவி, அபர்ணன், பிரதிக்சா, ரூஷானிகா, நிர்ணஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 604 [illegible] (விக்கினேஸ்வரன்)
077 316 [illegible] (கிருபாகரன்)

பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(cs.57230) (N-1)

### தம்பியின் விண்ணக வாழ்வில்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15.09.1987

மறைவு 18.01.2015

### அமரர் லோகநாதன் கஜேந்திரன் (கஜன்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன் உம் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்று
பத்து ஆண்டுகள் ஆனாலும்
கண் விட்டு மறையவில்லை
உங்கள் நினைவுகள்

49, விதானையார் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(cs 57217) (N-1)

துயர் பகிர்வோர்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று சீனாவை விமர்சித்தவர் இன்று ஒப்பந்தமிட்டது எப்படி?

## அநுரவின் சீனப்பயணத்தை போட்டுத்தாக்குகிறது பெரமுன

கொழும்பு, ஜன. 18

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அன்று புனரமைத்தபோது சீனாவுக்கு எதிராகக் கடும் விமர்சனங்களை முன்வைத்த ஜனாதிபதி அநுர, இன்று அதே துறைமுகத்துக்காக சீனாவிடமிருந்து பெரும் முதலீட்டைப் பெற்றுள்ளார் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நாம் நிர்மாணித்தபோது, இன்றைய ஜனாதிபதி அநுர அன்று கடும் விமர்சனங்களை முன்வைத்தார். சீனாவின் கொலனியாக இலங்கையை மாற்றுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்என்றும்விமர்சித்தார். ஆனால், இன்று அதே துறைமுகத்துக்காக சீனாவிடம் இருந்து மிகப்பெரியதொரு முதலீட்டைக் கொண்டுவந்துள்ளார். இது மகிழ்ச்சியளிக்கின்றது. நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வருவதை நாம் வரவேற்கின்றோம். அநுர அரசு ஆட்சிக்கு வந்து 100 நாள்கள் கடந்துவிட்டன. ஆனால் அபிவிருத்தித் திட்டங்கள் இன்னும் ஆரம்பமாகவில்லை - என்றார். (அ-ம-100)

## வன்முறைகள்...

மனித உரிமைகள் கண்காணிப்பகம் 2025ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அநுரகுமார திஸநாயக்க தனது தேர்தல் பரப்புரையின்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கப்போவதாகக் கூறியிருந்தார். ஆனால், இதுவரை அந்த விடயத்தை அவர் செயற்படுத்தவில்லை. அதுபோல், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி அநுர பொறுப்புச் சொல்லவில்லை. ஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்கவுக்கு அவரது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே, அவர் தேர்தல் பரப்புரையின்போது தெரிவித்த வாக்குறுதிகளை முற்றுமுழுதாக நிறைவேற்றவேண்டும். 2024ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழ் பகுதிகளில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இந்த விடயத்திலும் ஜனாதிபதி அநுர விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-6)

## வல்வெட்டித்...

பட்டன. போதைப்பொருள் கடத்தல்களை முறியடிக்கும் வகையிலும், குற்றவாளிகளைக் கைதுசெய்யும் விதமாகவும், நாடெங்கும் தற்போது திடீர் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில், இவ்வாறான சுற்றிவளைப்பொன்று
முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே, வல்வெட்டித்துறையில் நேற்று சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## நீதிமன்றத்...

டுக்கப்பட்டுள்ளன என்று பதில் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பழைய பகையை அடிப்படையாக வைத்தே இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது. தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சம்பவத்தை வழிநடத்தியவர் தற்போது வெளிநாட்டில் உள்ளார். அவருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை பெறப்பட்டு, அவரைக் கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44-56)

## பொறுப்புக்...

வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புத் தூதுக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர் தெரிவித்தார்.

இலங்கையில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்ட ஐரோப்பியத் தேர்தல் கண்காணிப்புக்குழு தனது இறுதி அறிக்கையை நேற்று வெளியிட்டது. இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புத் தூதுக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் ஜனநாயகப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லையும் அரகலயப் போராட்டத்துக்குப் பின்னரான அரசியல் இயல்புநிலையை மீட்டெடுத்த மையையும் 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து நிற்கின்றது. பொதுமக்கள் ஜனநாயக செயல்முறைக்கான தங்கள் அர்ப்பணிப்பை இதன்போது வெளிப்படுத்தியுள்ளனர். அதேநேரத்தில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து முக்கிய தேர்தல் காலகட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்துள்ளது. தேர்தல் காலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவானது சுயாதீனமாகவும் உறுதியுடனும் செயற்பட்டது. தேர்தல் அமைதியாக இடம்பெற்றமையும் வேட்பாளர்கள் முடிவுகளை ஏற்றுக்கொண்டமையும் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் சக்தியை அடிக்கோடிட்டுக் காட்டியது. ஒட்டுமொத்தமாக நோக்கின், இலங்கையில் தேர்தல் சட்ட கட்டமைப்பு நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் ஜனநாயகத்தின் மீள்தன்மையை ஜனாதிபதித் தேர்தல் உறுதிப்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலும் சீர்திருத்தங்களை ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் செயற்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். தற்போதுள்ள நிலையில், இலங்கையை ஆதரிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது - என்றார். (அ-ம-இ)

## தமிழரசின்...

திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தின்போது, கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள், மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. அத்துடன், புதிய அரசியலமைப்பு முயற்சிகளை ஓரணியில் இணைந்து கையாளுவது தொடர்பிலும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட வாய்ப்புக்கள் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-110)

## ஏப்ரல்...

மன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே, உள்ளூராட்சித் தேர்தலை ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாளொன்றில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியாகவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-44)

## மின்சாரக்...

அமுல்ப்படுத்துமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, முதல் 30 அலகுகளுக்கு 29 வீதமும், 31 முதல் 60 வரையிலான அலகுகளுக்கு 28 வீதமும், 61 தொடக்கம் 90 வரையான அலகுகளுக்கு 19 வீதமும், 91 தொடக்கம் 180 வரையான அலகுகளுக்கு 18 வீதமும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பொதுத்தேவைக்கு 12 வீதமும், அரச நிறுவனங்களுக்கு 11 வீதமும், ஹோட்டல் துறைக்கு 31 வீதமும், கைத்தொழில்துறைக்கு 30 வீதமும், மதத் தலங்களுக்கு 21 வீதமும், வீதி விளக்குகளுக்கு 12 வீதமும் மின்கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## திருவள்ளுவர்...

இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்ட, கிளிநொச்சி திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரிக் கிராமம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக ஆகியோர் இணைந்து இந்த மாதிரிக் கிராமத்தைத் திறந்துவைத்தனர். நகர மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீடமைப்புத் துணை அமைச்சர் டி.பி.சரத், தேசிய வீடமைப்பு மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் மற்றும் மூத்த அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ-ம-இ)

## மின்கட்டணக்...

குறைக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது. எனினும், 20 சதவீத குறைப்பே இடம்பெற்றுள்ளது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை - என்றார். (அ-ம-44)

## ஈழத்தமிழ்...

ஆளுமையாகச் செயற்பட்ட அவர், நடிகர், நாடகாசிரியர், நெறியாளர், தயாரிப்பாளர், ஆய்வாளர், நாடகப் போதானாசிரியர், நாடகக் களப்பயிற்சியாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் என பல்பரிமாணமுடையவராகத் திகழ்ந்தார். குழந்தை ம.சண்முகலிங்கம் ஈழத்தமிழ் அரங்க உலகில் புதிய நடைமுறைகளையும், புதிய செல்நெறிகளையும் உருவாக்கியவர். குறிப்பாக சிறுவர் நாடக உலகில் கோலோச்சிவர். அதுதவிர ஈழத்தமிழ் நாடக உலகுக்கு புதிய பரிணாமத்தைக் கொடுத்த மண்சுமந்த மேனியரும் அவரது எழுத்துருவிலே உருவானதாகும். ஆளுமை மற்றும் நடத்தைக்காக வெகுவாக மதிக்கப்பட்ட அவரின் மறைவு, ஈழத்தமிழ் நாடக உலகுக்குப் பெரியதொரு இழப்பாகவே அமைந்துள்ளது. அவரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் - திருநெல்வேலி, ஆடியபாதம் பகுதியிலுள்ள அவரது வீட்டில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## கோத்தாவிடம்...

தினர் நேற்றுப் பல மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

கதிர்காமம் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பில் வாக்குமூலத்தைப் பெறுவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். சுமார் ஒன்றரை மணிநேர விசாரணைகளுக்குப் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், பொதுஜன பெரமுனவினரை அரசியல் ரீதியாகப் பழிவாங்குகின்றது என்று பெரமுனவின் முக்கியஸ்தரான நாமல் ராஜபக்ச நேற்றுமுன்தினம் குற்றஞ்சாட்டியிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே கோத்தாபய ராஜபக்ச நேற்று விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## தெல்லிப்பழையில்...

அதைத் தொடர்ந்து, ஆலயத்தில் இருந்து யூனியன் கல்லூரி வரை ஆன்மீக விழிப்புணர்வு நடைபவனி நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கலாச்சார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்ரானுக்கு சிறை

அரச காணிகளை அடாத்தாக ஆக்கிரமித்த வழக்கில், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 14 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)


### கோழி மலிவு விலையில்

புறொயிலர் இறைச்சி : 850.00
முட்டை : 32.00

நியு சிற்றி கோழிக்கடை
நாவாந்துறை, மார்கட்
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 939 8717

(CS 29596) V-1

### 35ஆம் ஆண்டில்....

"கல்வியே கண் மற்றெல்லாம் பின்"

ஏசியன் அக்கடமி

கேணியடி, கொக்குவில் மேற்கு.
புதிய கல்வியாண்டு 2025
தரம் 06 முதல் O/L வரை

ஆரம்பம் : 18.01.2025 (இன்று) மாலை 3.30 மணி
அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
ICT பயிற்சிகளுடன் நடைபெறுகின்றது.
மாணவர் அனுமதிகள் வழங்கப்படுகின்றன

மேலதிக விபரமறிய : நிர்வாக இயக்குநர்
திரு. ஷங்கர் வாமன்
(விஞ்ஞான ஆசான்) : 077 740 4883

(CS/57224) J-1

### மீண்டும் யாழ் மண்ணில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

Physics T.சம்பந்தன் B.Sc PGDE
Chemistry சு.சுரேஸ்குமார் B.Sc PGDE
Com.Maths A.பத்மநாதன் B.Sc
Biology R.குகாநந்தன் B.Sc PGDE MED

A/L 2025,2026
Day Class
ஆரம்பம்
JAN 18
சனிக்கிழமை
9.00a.m

நிரு கல்வி நிலையம்
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்
077 787 2903 | 077 555 9028 | 077 691 1696 | 077 796 0138

### வீடு வாடகைக்கு

திருநெல்வேலியில்
வீடு, அறைகள்
வாடகைக்கு உண்டு.
(கல்லூரி மாணவர்களுக்கு)
076 998 0837, 075 396 2560

(CS/57225) J-1

### சாரதி தேவை

தாவடி, கொக்குவிலில்
இயங்கிவரும் பிரபல்யமான
அரிசியாலை ஒன்றிற்கு சாரதி
தேவை. (பாரவூர்தி சாரதி)
076 096 9728

(CS/57214) J-1

### காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி சந்நிதி வீதி
வீரபத்திரர் கோவிலடியில்
6 பரப்பு தோட்டக் காணி
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
076 882 8694, 077 411 8851

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோவில் முன் வீதியில் 34 பரப்புக்காணி விற்பனைக்குண்டு A-9 வீதி முகப்புடன் 38 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- ஆனந்தகானம் வீதி முகப்புடன்
- பலாலி வீதியிலிருந்து 1Km தூரம்
- இருபடிப் பாதையுடன்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஊரெழு கணேசா வித்தியாலயம் 1Km தூரம்
- செம்மண், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- 1 பரப்பின் விலை பதினைந்து லட்சத்து ரூபாய் (1,500,000)
- பார்வையிடும் நேரம் காலை 08.00 முதல் மாலை 06.00 வரை

Golden Real State (PVT) LTD
Owner and Direcctor
T-Kalaithasan

தொடர்பு: 076 069 1105
076 298 1105
077 468 3354

(CS/57234) J-1

### நல்லூரில் காணி விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் (Temple Road) க்கு அருகில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு மற்றும் வெள்ளவத்தையில் 740,1350 Sqft, தெகிவளையில் 1150 Sqft, கல்கிசையில் 950 Sqft Apartments, தனி வீடுகள் விற்பனைக்கு.

தொடர்பு:- 076 306 0013


## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 05 . 1962



மறைவு
17 . 01 . 2025

### வாமதேவன் குலசேகரம் (செட்டியார்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் குலசேகரம் (செட்டியார்) அவர்கள் நேற்று (17.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாமதேவன்-ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையர்திலகம் அவர்களின் பாசமிகு கணவரும் டிலக்சன் (2024 உயர்தர மாணவன் கோண்டாவில் இந்துக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும் சந்திரசேகரம், கோபாலகிருஸ்ணன் காலஞ்சென்ற மதிவதனகாந்தி மற்றும் சொருபகாந்தி (ஆசிரியை), கிருஸ்ணகாந்தி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் தேவராசா (கனடா) காலஞ்சென்ற வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மஞ்சவனப்பதி பின் வீதி,
கொக்குவில் மேற்கு,

தகவல்:
குடும்பத்தினர்.

(CS29590) P-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 30.01.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் கார்த்திகேசு செல்லத்துரை

(சோபனா நகைமாடம் - உரிமையாளர்)

அவர்களின் 1ம் ஆண்டு நினைவு நாளும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.01.2025) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் **நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில்** மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். இதற்கு தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாசத்தின் உறைவிடமே, பண்பின் ஒளிவிளக்கே
பண்ணிய புண்ணியத்தால் பரமனடி நாடி
விண்ணுலகை நண்ணி விரைந்தீரோ!
ஆண்டுகள் நகர்ந்தாலும் நினைவுகள் நகர்வதில்லை
ஓராண்டின் நிறைவு நாளில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

359/12, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/29585) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org